EASTERN UNIVERSITY
23 AUG 2013

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

## OCC 4103 தமிழில் காவியங்கள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

---

01. 'காவியம்' என்றால் என்ன. காவியத்தின் பண்புகள் பற்றிய உலகளாவிய கருத்துக்களையும் தண்டியலங்காரம் கூறும் கருத்துகளையும் உதாரணங்களுடன் ஒப்பிட்டாராய்க.

02. சிலப்பதிகாரம் 'தன்னேரில்லாத் தலைவி'யைக் கொண்ட காவியமாகும், 'கண்ணகி' என்ற பாத்திரத்தினூடாக சிலப்பதிகாரம் வளர்த்துச் செல்லப்படுமாற்றை விளக்குக.

03. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்றவகையில் அவற்றின் பொருளமைதி, அமைப்பு ஆகியவற்றை ஒப்பிட்டாராய்க.

04. "பாத்திரச் சித்திரிப்பிலும் வருணனையிலும் சீவக சிந்தாமணி சிறப்பிடத்தைப் பெறுகிறது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

05. 'கம்பராமாயணக் காவியக் கட்டமைப்பிலும் பாத்திர உருவாக்கத்திலும் கம்பனின் ஆளுமை வெளிப்படுகின்றது.' மதிப்பிடுக.

06. கந்தபுராணத்தில் புராணக் கூறுகளும் காப்பியக் கூறுகளும் பொருந்தியுள்ளமையை விளக்கி, அதனை ஒரு பெருங்காப்பியமாகக் கொள்ளலாமா? என்பதனை ஆராய்க.

***